(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை



10 சைவசமய பாடப்பரீட்சை : 2023
தரம் பத்து

nselva.com

காலஅளவு } 2.30 மணி

புள்ளிகள் : 100

இல.

மாணவர் சுட்டெண்: }

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. தடத்த நிலையில் இறைவன் எண்குணங்களை உடையவனாக விளங்குகிறான். எண்குணங்களுள் அடங்காதது?
   1) முற்றும் உணர்தல் 2) இயல்பாகவே பாசங்களில் பற்றுதல்
   3) இயற்கை உணர்வினனாதல் 4) வரம்பில் இன்பம் உடைமை
2. கந்தசஷ்டி விரதம் எத்தனை நாட்கள் அனுஷ்டிக்கப்படும்?
   1) 3 நாட்கள் 2) 6 நாட்கள் 3) 11 நாட்கள் 4) 21 நாட்கள்
3. பூர்வக்கிரியையில் அடங்குவது எது?
   1) அன்னப்பிராசனம் 2) சிரார்த்தம் 3) சபின்டீகரணம் 4) ஈமக்கிரியை
4. சுந்தரர் தனது இடதுகண் பார்வையை பெற்றுக்கொண்ட தலம் எது?
   1) திருத்துருத்தி 2) திருவாரூர் 3) திருப்புன்கூர் 4) திருவேகமச்சம்
5. இரட்சாபந்தனம் இறைவனின் பின்வரும் எத்தொழிலைக் குறிக்கின்றது?
   1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல் 4) அருளல்
6. சித்தாந்த சாத்திரத்தின் முதல்நூல் என்ற சிறப்பை உடையது எது?
   1) இருபா இருப.்.து 2) சிவஞானசித்தியார்
   3) சிவஞான போதம் 4) உண்மை விளக்கம்
7. ''தமிழாகமம்'' எனச் சிறப்பிக்கப்படும் நூல் சைவத் திருமுறையுள் எத்தனையாவதாக அமைகிறது?
   1) 8 2) 10 3) 11 4) 12
8. ''கிராமசாந்தி'' எனும் பூசை எக்கடவுளுக்குச் செய்யப்படுகிறது?
   1) விநாயகர் 2) வீரபத்திரர் 3) வைரவர் 4) முருகன்
9. ''யாழ்முரி'' என்ற பண்ணைக் கொண்ட பதிகம் எது?
   1) ''துணிவளர் திங்கள்.....'' 2) ''இடரினுந் தளரினும் .....''
   3) ''மடையில் வாளை.....'' 4) ''மாதர் மடப்பிடியும் .....''
10. திருநாவுக்கரசரது குருபூசைத்தினம் யாது?
    1) வைகாசி மூலம் 2) ஆடிச் சுவாதி 3) ஆனி மகம் 4) சித்திரைச் சதயம்
11. சுவாமி விபுலானந்தரது இயற்பெயர் யாது?
    1) மயில்வாகனம் 2) சாமித்தம்பி 3) சிவாநந்தர் 4) மெய்கண்டார்
12. பின்வருவனவற்றில் திரிகரணம் எது?
    1) ஆணவம் 2) பாசம் 3) வாக்கு 4) பந்தம்
13. ''நையாத மனத்தினை.....'' என்ற திருப்பதிகத்தைப் பாடியவர் யார்?
    1) சேந்தனார் 2) கருவூர்த்தேவர் 3) மாணிக்கவாசகர் 4) சேக்கிழார்

14. சிவனதும் திருமாலினதும் புத்திரன் என்ற நிலையில் ஆகம நிலைப்பட்ட வகையிலும் வழிபடப்பட்டு வருபவர் யார்?
1) பெரிய தம்பிரான் 2) மதுரை வீரன் 3) காத்தவராயன் 4) ஐயனார்

15. மீனாட்சியம்பாள் சமேத சுந்தரேஸ்வர பெருமான் (சிவபிரான்) மூலவராக வீற்றிருக்கும் ஆலயம் எது?
1) பொன்னம்பலவாணேச்சரம் 2) கட்டுகலை செல்வவிநாயகர் ஆலயம்
3) ஈழத்து சிதம்பரம் 4) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

16. ஆண்டு தோறும் ஆடிமாதத்தில் பன்னிரு நாட்கள் உற்சவம் நடைபெறும் கோயில் எது?
1) செல்வச்சந்நிதி 2) மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்
3) தாந்தாமலை முருகன் ஆலயம் 4) திமிலைதீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம்

17. திருத்தொண்டர் திருவந்தாதியை பாடியருளியவர் யார்?
1) நம்பியாண்டார் நம்பி 2) சுந்தரர் 3) சேக்கிழார் 4) அருணகிரிநாதர்

18. முக்குணங்களுள் அடங்காதது எது?
1) இராஜசம் 2) சாத்வீகம் 3) சித்தம் 4) தாமசம்

19. ''கைத்தல நிறைகனி..'' என்ற திருப்புகழ் எந்தக் கடவுளை நோக்கிப் பாடப்பட்டது?
1) முருகன் 2) திருமால் 3) சிவன் 4) விநாயகர்

20. முற்றிலும் கருங்கல்லால் அமைக்கப்பட்ட ஆலயம் எது?
1) பொன்னம்பலவாணேச்சரம் 2) பெரிய போரதீவு பத்திரகாளியம்மன் ஆலயம்
3) செல்வச்சந்நிதி 4) திமிலைதீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம்

21. ''விஞ்ஞானகலர்'' எனப்படுவது எம்மலத்தால் பீடிக்கப்பட்ட ஆன்மா ஆகும்?
1) ஆணவம் 2) கன்மம் 3) மாயை 4) யோகம்

22. காலத்தால் முந்திய இசைநூல் எனப்படுவது எது?
1) இருக்கு வேதம் 2) யசுர் வேதம் 3) சாம வேதம் 4) அதர்வண வேதம்

23. அமாவாசையை இறுதி நாளாகக் கொண்டு மாதத்தைக் கணிப்பிடும் முறை யாது?
1) சௌரமான முறை 2) அமாந்த முறை
3) சூரியமான முறை 4) பூர்ணிமாந்த முறை

24. அட்டபுஷ்பங்களுள் அடங்காதது எது?
1) உண்மை 2) இன்பம் 3) பொறுமை 4) அறிவு

25. அருணந்தி சிவாச்சாரியார் எங்கே அவதரித்தார்?
1) திருமுனைப்பாடி 2) திருவாதவூர் 3) சீர்காழி 4) திருத்துறையூர்

26. தண்ணளி வெண்குடை வேந்தன் யார்?
1) இராஜராஜசோழன் 2) கூன்பாண்டியன்
3) மனுநீதிகண்ட சோழன் 4) அநபாயச் சோழன்

27, 28 வரையான கேள்விகளுக்கு கீழ்தரப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு விடை தருக?

A - ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் B - பொன்னம்பலவாணேசர் C - சுந்தரேசுவரர்	இறைவன்
D - சிவகாமி அம்பாள் E - சௌந்தராம்பிகை F - பூதேவி	இறைவி
G - இலுப்பை மரம் H - அரசு மரம் I - பலாமரம்	தலவிருட்சம்
J - சுவர்ணபுஷ்கரணி K - பாலாவி L - துர்வாச சாகரம்	தீர்த்தம்

27. வருடத்திற்கு மூன்று முறை திருவிழா நடைபெறும் ஆலயம் பற்றிய சரியான தொகுதி எது?
1) CEGL 2) BFGL 3) CDHJ 4) CEHJ

28. தினமும் ஆறுகாலப் பூசைகளும் சிவராத்திரி முதலான நைமித்திய கிரியைகளும் மிகச்சிறப்பாக நடைபெறும் ஆலயம் பற்றிய சரியான தொகுதி எது?
1) AFIJ 2) CDGL 3) BDHJ 4) BEHL

29, 30வது வினாக்களுக்கு கீழ்த்தரப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு விடை தருக

A - திருமறைக்காடு B - திருமருகல் C - திருப்பெண்ணாகடம் D - திருப்பாச்சிலாச்சிராமம்	கோவில்
E - அரவம் தீண்டிய வணிகனை உயிர்ப்பித்தமை F - முயலகன் நோயினை நீக்கியமை G - வேதங்களால் பூட்டப்பட்ட கதவு திறக்கப்பட்டமை H - சூல, இடப இலட்சனைகள் தோளில் பொறிக்கப்பட்டமை	அற்புதம்
I - ''பொன்னார் திருவடிக்கு .....'' J - ''சடையாயெனுமால் .....'' K - ''துணிவளர் திங்கள் .....'' L - ''பண்ணினேர் மொழியாளுமை .....''	பதிகம்

29. தாசமார்க்கத்தை கடைப்பிடித்து சிவனடி சேர்ந்த நாயன்மார் பற்றிய சரியான தொகுதி எது?
1) AGI 2) CHI 3) BEK 4) DFL

30. ஆளுடைய பிள்ளையாருடன் தொடர்புடைய சரியான தொகுதி எது?
1) AGL 2) DHI 3) DEK 4) BEJ

(30 x 1 = 30 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. எந்தக் காலத்தில் சுவாமி தரிசனஞ் செய்தல் ஆகாது?
2. ஐந்தொழில்களில் ஒன்றான அருளல் என்பதன் விளக்கம் யாது?
3. நாடோறும் நியமமாக எந்த நேரத்திலே நித்திரை விட்டெழுதல் வேண்டும்?
4. இலங்கையில் இன்றுள்ள கோயிற் கட்டிடங்களுள் மிகத் தொன்மையானது எது?
5. ''பால் நினைந்தூட்டும்....'' எனும் திருவாசகம் பாடப்பெற்ற தலம் யாது?
6. ''சனி வழிபாட்டிற்கு ஏற்ற தானியம் எது?
7. தீபாவளி என்பதன் பொருள் யாது?
8. சுவாமி விபுலானந்தர் யாரிடம் ஞானோபதேசம் பெற்று ''விபுலானந்தர்'' எனும் துறவுத் திருநாமத்தைப் பெற்றுக் கொண்டார்?

(8 x 1 = 8 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. "நாமார்க்குங் குடியல்லோம் ....." 2. "விநாயகனே வெவ்வினையை ....."
3. "பால்நினைந் தூட்டுந் ....." 4. "நையாத மனத்தினனை ....."
5. "சிவனொடு ஒக்கும் தெய்வம் ....."

(2x 7 = 14 புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

1. "அகழ்வாரைத் தாங்கும் ....." 2. "அழுக்கா(று) உடையார்க்(கு) ....."
3. "சிற்றின்பம் வெ.ஃகி ....." 4. "படுபயன் வெ.ஃகிப் ....."
5. "துள்ளியார் குற்றமும்....." **(4x2 = 8** புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. "இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"

அ. விரதம் என்றால் என்ன?

ஆ. மனிதரிடம் காணப்படும் 3 அசுரப்பண்புகளை தருக?

இ. விநாயகசஷ்டி விரதகாலத்தில் விநாயகரை நிவேதித்து வழிபாடு செய்யும் நான்கு பொருட்கள் தருக?

(10 புள்ளிகள்**)**

2. "சிவனும் உமையும் பல்வேறு தோற்றங்களில் நின்று எங்களுடைய வழிபாடுகளை ஏற்றுக்கொள்கின்றனர்"

அ. சிவனுடைய மூன்று வடிவங்களைத் தருக?

ஆ. ஆறுகால பூசைகளும் எவை?

இ. மகோற்சவம் இறைவனின் ஐந்தொழிலை உணர்த்துகிறது. பின்வரும் தொழிலைக் குறிக்கும் மகோற்சவதிற்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

1. படைத்தல்
2. காத்தல்
3. அழித்தல்
4. அருளல்

(10 புள்ளிகள்**)**

3. "சைவசித்தாந்த கருத்துக்களை விளக்கம் செய்த பெரியோர்கள் நால்வரை சந்தான குரவர் என அழைப்பர்"

1. அகச்சந்தான குரவரகள் மூவரைத் தருக?
2. மெய்கண்ட தேவர் பற்றிய பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?
   அ. தாய்
   ஆ. இயற்பெயர்
   இ. அருளியநூல்

3. அருணந்தி தேவர் பற்றிய பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?
   அ. சிறப்புப்பெயர்
   ஆ. எழுதிய நூல் இரண்டு தருக
   இ. இறைவன் திருவடியை அடைந்த நாள்

(10 புள்ளிகள்**)**

4. "இந்து சமயத்தின் முதல் நூல்களாக போற்றப்படுவன வேதங்களும் ஆகமங்களும் ஆகும்"

அ. வேதங்களின் மறுபெயர்கள் எவையேனும் மூன்று தருக?

ஆ. இருக்கு வேதசங்கிதையில் காணப்படும் பாடல்கள் புகழ்ந்து பாடப்படும் மூன்று தெய்வங்களை குறிப்பிடுக.

இ. வேதங்களின் எவையேனும் இரண்டு காண்டங்களைக் குறிப்பிட்டு அவற்றை விபரிக்க.

(10 புள்ளிகள்**)**

5. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. பெரியபுராணம்
2. ஐயனார் வழிபாடு
3. உயிரோம்பல்
4. செல்வச்சந்நிதி ஆலயம்

(10 புள்ளிகள்**)**